# கனடாப்பதிப்புரை

சித்தர்கள் வரலாறு பற்றி பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளார்கள். அவர்களின் வரலாறுகளைப் படிப்பவர்களுக்கு மத்தியில் ஆன்மீக உணர்வு கிளர்ந்தெழும். வாழ்க்கை நிலையாமையையும், இறைவனின் திருவருளே இறுதிப் புகலிடம் என்பதையும் சித்தர்களின் வரலாறுகளைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். இந்நூலாசிரியர் ஆத்மீக வள்ளல் நா. முத்தையா அவர்கள் ஒரு சமரச சன்மார்க்க ஞானி. 1939ஆம் ஆண்டு தொடக்கம் 1995ஆம் ஆண்டுவரை அவர் இறைவனின் திருவடியை அடையும்வரை சித்தர்கள் மகான்கள் ஞானிகளை தேடிச் சென்று தரிசனம் பெறுவதை பெரும்பேறாக கருதியவர்.

தான் கற்று அறிந்ததை மற்றையோருக்கு எடுத்துரைப்பதில் தீவிர ஈடுபாடு காட்டியவர். நாடறிந்த சொற்பொழிவாளர், எழுத்தாளர், பிரபல ஆத்மஜோதி சஞ்சிகையின் நிறுவனர், முன்னாள் ஆசிரியர். தான் வாழும் சமுதாயத்திற்கும் தன் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். நைட்டீகப் பிரமச்சாரி. தன்வாழ்நாள் முழுவதும் துறவு வாழ்வு வாழ்ந்தவர். இந்நூலாசிரியர் வழி ஒரு தனிவழி. தனக்கென்று சீரிய பாதையை வகுத்து வாழ்ந்தவர். தன்னைச் சார்ந்தவர்களையும் மாணவ சமுதாயத்தையும் வாழ வைத்தவர். தன் பணிக்கு மலையகத்தை தளமாக தேர்ந்தெடுத்தவர். சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால் நாடு உயரும் என்பது அவரின் நம்பிக்கை. மலையக மக்களுக்கு இடையே சமய அறிவு, ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை நிலைபெற்று வேரூன்றச் செய்த பெருமையில் ஆத்மீக வள்ளல் அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

அவர் முப்பத்திரண்டு வருடம் முயன்று இந்நூலை எழுதியுள்ளதாக தன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இலஙகையின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாக இலட்சக்கணக்கான மலையகமக்கள் செயலபடுவது போல, இலங்கையில் சித்தர் பரம்பரை ஒன்று உருவாவதற்கும் மலையகம் தளமாக அமைந்துள்ளது என்பதை ஆசிரியர் இந்நூலில் விபரிக்கின்றார். பெரியானைக்குட்டி சுவாமிகள், குமரகுருபரசுவாமிகள் ஆகியோர் மலையகத்தில் பிறந்து வளர்ந்து தமிழகம் சென்று மூவராக

வந்து எமது மண்ணில்அருட்பரம்பரைக்கு வித்திட்டார்கள் என்று குறிப்பிடுகின்றார்.

16 சித்தர்களின் வரலாறுகளை இந்நூலில் விபரிக்கும் ஆசிரியர் அவர்கள் ஆறு அருளாளர்களை நேரடியாகத் தரிசனம் செய்துள்ளார். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு சிவயோக சுவாமிகள் சித்தானைக்குட்டி சுவாமிகள செல்லாச்சி அம்மையார் தாளையான் சுவாமிகள், மகாதேவசுவாமிகள், நயினாதீவு சுவாமிகள் ஆவார்கள்.

இலங்கையில் இந்நூல் 1980ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது. உயர்தரவகுப்பில் இந்துநாகரீகம் படிக்கும் மாணவர்களுக்கு உசாத்துணை நூலாகவும் உள்ளது. இதுவரை மூன்று பதிப்புக்களைக் கண்டுள்ளது. ஈழத்துச் சித்தர்களின் வரலாறுகளை ஆய்வுசெய்யும் அறிஞர்களுக்கு ஒரு வழிநூலாகவும் உள்ளது. பல மகான்களின் வரலாறுகளை தன் ஆத்மஜோதி பத்திரிகை மூலமாகவும் நூல் வடிவாகவும் வெளிக்கொணர்ந்த ஆசிரியர் அவர்களுக்கு எம் சைவத் தமிழ் உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

எமது ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையை 1994ஆம் ஆண்டு யூலாய் மாதம் தாபித்தவர் இந்நூலாசிரியரே. 123 பேரை ஆயுள் அங்கத்தவர்களாகவும், திருமுறைகளை ஓதும் பெரும் திருக்கூட்டத்தையும் தன்னகத்தே கொண்ட பேரவை பல தரப்பட்ட சமயப்பணிகளை முன்னெடுத்துப் பணியாற்றுகின்றது. பேரவை தன் 40வது வெளியீடாக இந்நூலை எட்டாவது வருடமாக நடத்தும் பன்னிருதிருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவில் வெளியிடுகிறது.

இந்நூலின் அட்டைப் படத்தை வடிவமைப்புச் செய்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் அழகுற அச்சமைப்புச் செய்த விவேகா அச்சகத்தினருக்கும் நூல் வெளிவருவதற்கு தங்களால் இயன்ற பண உதவி புரிந்த திருக்கூட்டத்தினருக்கும் அன்பர்களுக்கும் பேரவையின் சார்பில் எந்நன்றிகள்

சிவ முத்துலிங்கம்
செயலாளர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
(பொறுப்பாளர் நூல் வெளியீட்டுப் பிரிவு)

## உள்ளே...


| ஈழத்துச் சித்தர்கள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடையிற் சுவாமிகள் | 17 |
| 2. | பரமகுரு சுவாமிகள் | 30 |
| 3. | குழந்தைவேற் சுவாமிகள் | 35 |
| 4. | அருளம்பல சுவாமிகள் | 46 |
| 5. | யோகர் சுவாமிகள் | 53 |
| 6. | நவநாத சுவாமிகள் | 63 |
| 7. | பெரியானைக்குட்டி சுவாமிகள் | 71 |
| 8. | சித்தானைக்குட்டி சுவாமிகள் | 87 |
| 9. | சடைவரத சுவாமிகள் | 118 |
| 10. | ஆனந்த சடாட்சர குரு | 126 |
| 11. | செல்லாச்சி அம்மையார் | 136 |
| 12. | தாளையான் சுவாமிகள் | 144 |
| 13. | மகாதேவ சுவாமிகள் | 154 |
| 14. | சடையம்மா | 163 |
| 15. | நாகநாத சித்தர் | 170 |
| 16. | நயினாதீவுச் சுவாமிகள் | 181 |

மேதான் உண்ணுவார்கள், மற்றவற்றை ஒரு குழையல் போட்டு, சூழ நிற்பவர்களுக்கு ஒரு பிடிவீதம் கொடுத்து விடுவார்கள். சுவாமி சீராகச் சாப்பிடுவதில்லை என்று ஈனமுத்துவுக்கு ஒரு ஏக்கம். சுவாமிகளைச் சாப்பிடு மாறு வற்புறுத்துவார். இங்குள்ளவர்கள் அத்தனைபேரும் சாப்பிடும்போதே நானும் சாப்பிட்டுவிடுகின்றேனே. தனியாகவும் சாப்பிடவேண்டுமா? என்று சுவாமிகள் சிரிப்பார்கள். சுவாமிகளுடைய பொருள் பொதிந்த கருத்துக்கள் ஈனமுத்துவுக்கு எவ்வாறுவிளங்கப்போகிறது. சுவாமிகள் இப்படிப் பேசும்போதெல்லாம் ஈனமுத்து ஆமாங்க, என்னங்க என்று சொல்லிச் சும்மா இருந்து விடுவார்.

## குருடர் வேதநூலை வாசித்தார்

இந்தியாவிலிருந்து ஒரு பிராமணர் வந்தார். அவர் இரு கண்களினதும் பார்வையை இழந்தவர். சுவாமி களின் மகிமையைக் கேள்வியுற்ற அவர் சிநேகிதர் குருடரைக் கொண்டுவந்து ஈனமுத்துவின் குடிசையில் விட்டுச் சென்றனர். குருடர் கையில் ஒரு புத்தகக் கட்டு வைத்திருந்தார். இதன் காரணம் இளமையில் நல்ல கண்பார்வையுடையவராய் வேதங்களையெல்லாம் நன்கு கற்றுணர்ந்தவர் என்பதாகும். பிராமணர்கள் நேரத்திற்கு நேரம் அந்த அந்தணருக்கு உணவு அனுப்பிக்கொண்டிருந் தார்கள். அவரும் உண்டு விட்டுச் சுகமாகத் தூங்கினார். சுவாமிகளோ அவர் ஒருவர் இருப்பதாகவே கவனிக்க வில்லை. இதனால் ஈனமுத்துவுக்குத்தான் கஷ்டம் மேற் பட்டது. அந்தகரைக் காலாகாலத்திற்கு மலசலங் கழிப்ப தற்கு. குளிப்பதற்கு அழைத்துச் செல்லவேண்டும். குருடருக்கு இரவும் பகலும் ஒன்றே. பகலில் நன்றாகத் தூங்குவார் இரவில் விழித்திருப்பார். இரவில் அடிக்கடி ஈனமுத்துவுக்குத் தொந்தரவு கொடுப்பார். ஈனமுத்து

இதனை எத்தனை நாள்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்,

ஒருநாள் ஈனமுத்தர் சுவாமிகளைப் பார்த்து, 'அப்பா அந்தப் பிராமணருக்கு ஏதாவது சொல்லிவிடுங்களேன். அவர் இங்கு இருப்பதால் எனக்கல்லவா தொந்தரவாக இருக்கிறது' என்று கூறினார். சுவாமிகள் புன்முறுவல் பூத்து அருளினார். ஆமா ஐயரே, நல்ல கோழி குஞ்சு ஒன்று விலைக்கு வாங்கி உமது கையினாலே அறுத்து உரித்து அதைக் கொண்டு ஒருரசம் சரிக்கட்டவேண்டும் என்றார், அதைக்கொண்டுதான் உமக்கு வைத்தியம்செய்யவேண்டும் என்றார். ஐயர் இதைக்கேட்டு அருவருப்போ வெறுப்போ அடையவில்லை. மகான்களுடைய மகிமையில் ஐயருக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. அதனால்தான் அவ்வார்த்தைகள் அவருடைய உள்ளத்தில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ஈனமுத்தருடைய உதவியைக்கொண்டு ஐயர் கோழிக்குஞ்சு ரசத்தைப் பக்குவஞ் செய்து எடுத்துக் கொண்டு சுவாமிகள் முன்னிலையில் சென்றார். சுவாமிகள் அதனை வாங்கிச் சிறிது பருகினார். ஐயரே, இந்தக் கோழிக் குஞ்சு ரசம் நல்ல ருசியாக இருக்கிறதே, நீர் இந்தச் சமையலிலும் கைதேர்ந்த பேர் வழியாக இருக்கிறீரே. இந்தாரும் இதனைக் கண்விழித்துக் கொண்டே பருகும் என்று கூறிக் கொடுத்தார்கள்.

என்ன ஆச்சரியம்? ஐயரின் கண்கள் பார்வையைப் பெற்றன. ஐயர் அதனை வாங்கிப் பருகினார். பழரசம் போலிருந்தது. ஐயரே! எப்படிக் கோழிக்குஞ்சு ரசம் என்று வினவினார் சுவாமிகள். உடனே ஐயர் சாஷ்டாங்கமாகச் சுவாமிகளின் பாதாரவிந்தங்களைப் பிடித்துத் தமது கண்களில் ஒற்றிக் கண்ணீரால் சுவாமிகளுடைய பாதங்களைக் கழுவினார். 'சுவாமி, நான் இது போன்ற சுவையுள்ள பழரசத்தை எப்பொழுதுமே உண்டதில்லை' என்று ஐயர் நாத் தழுதழுக்கக் கூறினார்.

'ஐயரே, உமது புத்தகக் கட்டிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து, விரும்பிய பக்கத்தைப் புரட்டி வாசியும்' என்று சுவாமிகள் கட்டளையிட்டருளினார்கள். ஐயர் புரட்டிய பக்கத்தில் பின்வரும் கருத்துடைய வேதசுலோகம் காணப் பட்டது.

**"உணவளிப்பவர் ஈஸ்வரன், ஆதலால் உணவைப் பழிக்கக்கூடாது அளிக்கப்பட்ட உணவை உதறித்தள்ளி யவன் பெரும்பாவத்துக்காளாவன்"**

ஐயரும் பலமுறை வீழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்பம் சொரிந்து சுவாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு சினேகிதப் பிராமணரைப் போய்ச் சேர்ந்தார்.

## சுவாமிகளின் சமாதி

பெரியானைக்குட்டி சமாதி அடையப்போகும் காலத்தைச் சித்தானைக்குட்டிச் சுவாமிகள் உள்ளுணர்வால் அறிந்திருந்தார்கள். அதனால் உரியகாலத்திற்கு முன்பே பெரியானையை விட்டு விலகாது சுற்றிக்கொண்டே இருந்தார். பெரியானையை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்று சமாதி வைக்க வேண்டும் என்பது சித்தானையின் எண்ணம். பெரியானை இதற்குச் சம்மதிக்கவில்லை. கொழும்பிலேயே சமாதி ஆகவேண்டும் என்பது அவரது திருவுள்ளமாகும். ஒருநாள் சித்தானையை அழைத்து வடக்கே ஒரு பெரியவருடைய சமாதி உள்ளது. (கடையிற் சுவாமிகளைக் குறிப்பிட்டே இங்ஙனம் கூறினார்கள்.) அவருடைய மண்ணில் அடிமை மிதிக்கத் தகுதி அற்றவன். இவனுடைய சமாதி இங்குத் தான் அமையவேண்டும் என்றார். சித்தானை இதைப் பற்றி எவ்வித முயற்சியும் செய்யாது வாளா இருந்து விட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகை சென்ற போது திருநாவுக்கரசர் உழவாரப் படைகொண்டு திருட்டணி செய்து வீரட்டானரை வழிபட்ட இடம்

செய்தி எங்கும் பரவியது. இவ்விரு மகாத்மாக்களும் மக்களின் நோயைத் தாமே பெற்று அநுபவித்தனர்.

இச்செய்தியைப் 'பெருநாளி' சமஸ்தானத்துச் சிற்றரசர் கேள்வியுற்றார். அவ்விரு மகாத்மாக்களையும் தமது சமஸ்தானத்திற்கு அழைத்து உபசரிக்க எண்ணம் கொண்டார். மகாத்மாக்களை அழைத்து வருமாறு தனது கோவிந்தசாமியை அனுப்பி வைத்தார் அரசர். கோவிந்தசாமிக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் ஈடுபடுவதென்றால் தனி மகிழ்வு. தந்தையாரின் கட்டளைப்படி மகாத்மாக்களைத் தேடிக் கோவிந்தசாமி புறப்பட்டார்.

கோவிந்தசாமி அடியார்கள் இருவரையும் ஒரு குடிசையிலே சந்தித்தார். இவரது பாதங்களையும் தமது உச்சிமேல் சூடினார். கோவிந்தசாமியைப் பார்த்ததும் இருவரது உள்ளங்களும் நெகிழ்த்தன. கோவிந்தசாமியை வாரி எடுத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அந்த இரு அடியார்களும் யார் என்பதை அறிய வாசகர்கள் ஆவலாயிருப்பார்களல்லவா? அவர்களில் ஒருவர் கொழும்பு முகத்துவாரத்தில் சமாதி கொண்டிருக்கும் பெரியானைக் குட்டி சுவாமிகள். அடுத்தவர் நாவலப்பிட்டி — குயீன்ஸ்பரி தோட்டத்தில் சமாதிகொண்டிருக்கும் நவநாவ சித்தர் ஆவார். அடியார்களை அழைத்துச் செல்ல வந்த கோவிந்தசாமி அடியார்களுக்கு அடியார் ஆனார்.

அரச உடையில் கோமகனாக வந்த கோவிந்தசாமி அக்கணமே கோவணாண்டி ஆனார். இருவருக்கும் சீடர் ஆனார். தாம் வந்த கருமத்தை மறந்தார்; வீடு திரும்பவில்லை. நாம் ஏன் பிறந்தோமோ, அது அவரை ஆட்கொண்டுவிட்டது இருவரையும் பின் தொடர்ந்து நோயாளருக்கு வேண்டிய உதவிகள் செய்தார், ஒருவர் மூவரானார்; இருவர் மூவராயினர் என்று சொல்லும் அளவுக்கு மூவரும் இணை பிரியாது பாரதம் எங்கும் யாத்திரை செய்தனர். பூர்வீகத் தொடர்போலும் மூவரும்

அற்புத சாதனைகள் மலிந்து கிடக்கின்றன என்பதும் அவர்கள் தெரிந்த விடயமே. கப்பலில் இடமில்லாவிட்டாலும் மனத்தில் மனோவலிமையினால் தாவிச்செல்லும் அற்புத சக்தி அவரிடம் இருந்ததைக் குருநாதர் இருவரும் நன்கு அறிந்திருந்தனர்.

எந்த ராமநாமத்தின் உதவிகொண்டு அநுமார் கடலைக்கடந்து இலங்கை வந்து சேர்ந்தாரோ அதே கடலைக் கடப்பதற்கு ராமர் அணைகட்டி வரவேண்டியிருந்தது. அதேபோன்று குருமார் இருவரும் கப்பலில் வர கோவிந்தசாமியாகிய சீடர் ஆகாய மார்க்கமாக இங்கு வந்து சேர்ந்துவிட்டார். பெரியானையையும் சித்தானையும் விட்டுத் தனியாக நவநாதசித்தர் புறப்பட்டார்.

காலம் உருண்டோடியது. பிச்சைக்காரக் கும்பல்களோடு கும்பலாக சித்தானைக்குட்டியும் சுற்றித் திரிந்தார். சித்தானைக்குட்டி, பெரியானைக்குட்டியின் ஞானப் புதல்வன் என்பதை யாரும் அறியார். குருவின் முன்னிலையில் சித்தானை தன்னைப் பெரியவனாகக் காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லை. ஒருநாள் திடீரெனப் பெரியானையிடமிருந்து ஒரு உத்தரவு பிறந்தது. பேராதனைக்குப் போகவேண்டும். இரண்டு டிக்கெற் வாங்குங்கள் என்பதுதான் அந்த உத்தரவு. இதைப் பற்றிச் சிஷ்யனுக்கு மாத்திரமே விளங்கும். சிஷ்யன் இரண்டு டிக்கெற்றுடன் வந்துசேர்ந்தார். இருவரும் கோச்சேறிப் பிரயாணமாயினர். சென்ற இருவர் பெரியானையும் சித்தானையுமாகும். புகையிரதம் பேராதனையை அடைந்தது. புகையிரத மேடையிலே நீண்ட சட்டை அணிந்த ஒருவர் கையில் பிரம்பொன்றைச் சுழற்றியபடியே உலாவிக் கொண்டிருந்தார். அவர்தான் நவநாதசித்தர் பிரிந்தவர் கூடினார். அவர்கள் மூவரும் புகையிரத மேடையிலே சந்தித்தபோது நவநாதர் தமது கைப்பிரம்பினால் முதலில் தன் தலையிலும் அதன்பின் பெரியானையின் தலையிலும்

எண்ணி எண்ணித் தம்மைப் பற்றிக் குருக்கள் குருநாதன் கூறிய தீர்க்கதரிசனத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார்கள். குருநாதன் கூறிய சமாதிநிலை தமக்குக் கைகூடும் நாள் எந்தநாளோ என்று ஏங்கினார்கள்.

## குருநாதரின் தீர்க்கதரிசனம்

குருதேவரின் ஆசீர்வாதம் பெறுவதற்காகச் சித்தானை ஈழமுத்தரின் குடிலையைச் சுற்றிச் சுற்றித் திரிந்த காலம் ஒன்றிருந்தது பிச்சைக்காரரோடு பிச்சைக்காரனாய்ச் சேர்ந்துபோய் குருதேவரின் கண்களில் படும்வண்ணம் உட்கார்ந்து சாப்பிடுவார். சீடன் எதற்காகச்சுற்றுகிறான் என்பதைக் குருதேவர் உணர்ந்தார், தனிமையில் அழைத்தார் ஆசீர்வாதஞ் செய்து பின்வரும் தீர்க்கதரிசன வார்த்தைகளையும் கூறினார்.

**''புளிய மரத்து வீட்டுக்காரி; கள்ளன் பெண்பிள்ளையை எடுப்பாய் வம்பு வரும்; வழக்கு வரும், கெட்டுகீரை விற்று. பறங்கித்துரை, கோணாமலை, ''எ'' னாவைப் பார்க்கிடலும் ''பெ'' னாவாய் இருப்பாய்''**

'எ' னாவைப் பார்க்கிலும் 'பெ' னாவாய் இருப்பாய் என்றால் என்னைப் பார்க்கிலும் பெரியவனாய் இருப்பாய் என்பது பொருள். இத்தீர்க்கதரிசன வார்த்தைகள் சித்தானைக்குட்டி சுவாமிகளின் வாழ்க்கையில் பலித்த வகையை அவரது சரிதங்கொண்டு யாவரும் உணரலாம்.

சுவாமிகள் குயீன்ஸ்பரியிலும் சுற்றிலுமுள்ள தோட்டத் தொழிலாளர் மத்தியிலே பல சித்துக்கள் விளையாடி அவர்களை எல்லாம் ஆண்டவனை மறவாத அடியார்களாக்கிக் கதிர்காம யாத்திரை புறப்பட்டார்கள். கால்நடையாகவே யாத்திரை செய்து கதிர்காமம் சென்று சேர்ந்தார்கள். கதிர்காமம் செல்லுமுன்பே கதிர்காம முருகனைப்பற்றிச் சுவாமிகள் சில பாடல்கள் பாடினார். அதனைக் காதால் கேட்ட சிலர் கூறக் கேட்டுள்ளோம்.

காணாத காட்சிகளை எல்லாம் காட்டிய கதிர்காமத் தையன் மறைந்ததை எண்ணியெண்ணிக் கலங்கினார்.

## சேதம்மாவின் சந்திப்பு

திசைமகரகமவில் முத்துக்கந்தையா என்பவர் P.W.D. ஓவசியராக இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் சேதம்மா என்பது. அம்மையார்காரைதீவைச் சேர்ந்தவர். இவர்களுக்கு பிள்ளை குட்டிகள் யாருமில்லை. ஓவசியர் பருங் குடிகாரன். உழைப்பெல்லாம் இக்குடிக்கே செலவு செய்தார். அம்மையார் கடவுள் பக்தி உடையவர். சிவனடியார்களைக் கண்டால் மனமுவந்து வரவேற்று உபசரித்து அனுப்புவார். முத்துக்கந்தையா குடியில் இன்பங்கண்டார். ஓவசியர் குடியர்களை உபசரிப்பதில் இன்பங்கண்டார். குடிகாரனோடு ஒருபெண் என்ன இன்பத்தை அனுபவிக்க முடியும்? மனிதன் இயல்பிலேயே விலங்கு மனத்தை உடையவன், தினமுங் குடியிலே மூழ்கி இருப்பவனிடம் மனிதத்தன்மையை எப்போது காணமுடியும்? ஓவசியர் வீட்டிலிருக்கும்போது சாதுக்கள் யாராவது வந்து விட்டால், அவர்களை முற்றத்தில் வைத்தே ஏதாவது இரகசியமாகக் கொடுத்து அனுப்பிவிடுவார். ஓவசியர் வீட்டில் இல்லாதபோது அடியார்கள் வந்தால் உள்ளே அழைத்து அவர்கள் பாதம் விளக்கிப் பசியாற்றிக் கையிலும் ஏதாவது தந்து அனுப்புவார்.

ஓவசியருக்குச் சாதுக்களைக் கண்டால் ஒத்துக் கொள்ளாது. அது அவருடைய இயற்கை. அம்மையார் ஓவசியர் முன்னிலையில் ஒருவித வாழ்க்கையும் அவர் இல்லாத நேரத்தில் இன்னொருவித வாழ்க்கையுமாக இரட்டை வாழ்க்கை வாழவேண்டி ஏற்பட்டது. குடிகாரனாயிருந்தாலும் கணவன், கணவன்தானே. அதை மனதுட் கொண்டவராய்க் கணவனுக்குச் செய்யுங் கடமைகளில் எதுவும் குறையில்லாது செய்யும் கற்புடைய

அம்மையாராய் விளங்கினார் கணவனுக்கு சாதுக்களை ஆதரித்தல் விருப்பமில்லாததாயினும் தமது ஆன்ம ஈடேற்றத்திற்காக அதனையும் செய்து வந்தார்.

திசைமகரகமவில் இருந்து கதிர்காமம் செல்லப் புறப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள் ஓவசியர் முத்துச் சந்தையாவினுடைய வீட்டிற்குச் சென்றார். அம்மையார் சுவாமிகளை வரவேற்று உபசாரங்கள் செய்தார்கள். சுவாமிகளுடைய தோற்றம் அம்மையாருடைய உள்ளத்தைக் கவர்ந்தது, சிவபெருமானேதான் இந்தக் கோலத்தில் வந்தாரோ என்று அம்மையாருடைய உள்ளத்தில் ஒரு எண்ணம். சுவாமிகளை முதன்முறை தரிசித்தவர் என்றாலும் நீண்ட நாட்கள் அன்போடு பழகியவர்களைத் தரிசித்ததுபோல் மனதில் ஒரு உணர்வு.

''சுவாமி, கதிர்காமம் கொடியேற இன்னும் பல நாட்கள் இருக்கின்றன அதுவரைக்கும் சுவாமிகள் இங்குத் தங்கிச் செல்லலாமே'' என்பது அம்மையாருடைய வேண்டுகோள். ''சுவாமிகளுடைய வருகையால் நான் புனிதவதி ஆனேன். என் வீடும் புனிதம் அடைந்தது. சுவாமிகள் இங்கு தங்கினால் எனது கணவரும் திருந்தி விடுவார்'' என்று கூறினார். சுவாமிகள் புன்முறுவல் பூத்தார். ''நீ நினைப்பது போல் நான் இங்கிருந்தால் நீ சுகம் அனுபவிக்கமாட்டாய். சந்நியாசிகள் குடும்பஸ்தர்களுடையவீட்டில் தங்கக்கூடாது. சந்நியாச ஆச்சிரமத்திற்குப்பிழை. சந்நியாசிகளை இல்லறத்தான் காப்பாற்றுகின்றவன் என்றாலும் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு மேல் அந்த வீட்டில் அவன் நிற்கக்கூடாது. ஒரு ஊரில் மூன்று நேரச் சாப்பாட்டிற்குமேல் தங்கக்கூடாது. ஆனபடியினால் நான் என்பாட்டிலே சென்று பசிக்கும்போதெல்லாம் இங்கு வருவேன்'' என்று கூறிச் சென்றுவிட்டார். சுவாமிகள் அங்கு அடிக்கடி வந்து முற்றத்திலேயே நின்று அம்மையாரின் உபசரிப்பைப் பெற்றுத் திரும்பி விடுவார்.

## ஓவசியருக்குச் சோதனைகாலம்

ஓவசியர் அடுத்தநாள் தனது மேலதிகாரியாகிய எஞ்ஜினியரிடம் சென்றார். காரணம் எதுவுமின்றியே எஞ்ஜினியர் ஓவசியரோடு வேண்டா வெறுப்பாகப் பேசினார். இதனால் இருவருக்கும் வாய்ப்போர் நடந்தது. எஞ்ஜினியர் ஒரு வெள்ளைக்காரர். கறுப்புமனிதன் ஒருவன், எஞ்ஜினியரை எதிர்த்துப் பேசியது இதுவே முதல் தடவை. எஞ்ஜினியர் கோபங்கொண்டார். தற்காலிக வேலை நிறுத்தம் ஏற்பட்டது, ஓவசியருக்கு. ஓவசியர் கொழும்பு சென்றார்; பணம் செலவு செய்தார். பலன் ஒன்றும் கிட்டவில்லை. நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டார். ஓய்வு காலச் சம்பளம்தானும் பெறமுடியாமல் கஷ்டப்பட்டார். சம்பளம், கிம்பளம், மேல் வெட்டு இத்தனை வரும்படியும் ஆறுபோல் பாய்ந்த ஓவசியருக்கு எல்லாவழியும் திடீரென அடைப்பட்டு விட்டன. செய்வதறியாது திகைத்தார். மற்றைய ஓவசியர் மார் வீடுவாசலைக்கட்டி, காணி வாங்கி பிள்ளைகுட்டிகளுக்கென்றாவது பணத்தைச் சேகரித்து வைத்தார்கள். இவரோ குடிதான் சுவர்க்கம் என்று வாழ்ந்தவர்.

ஓவசியருக்கு இப்போ கொஞ்சம் ஞானம் உதயமானது. தான் செய்த அட்டாதுட்டித்தனம் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்தார். எப்போதும் அன்பாகவே தம்மோடு பழகிவந்த எஞ்ஜினியர் காரணமின்றிக் கோபங்கொண்டமை தான் செய்த வினை என்று உணர்ந்தார். மனைவியை அன்போடு அழைத்தார் 'அடி ஆத்தாளே, உன்னுடைய சாமியாராலே தான் இந்த வரத்து வந்திருக்கு. உடனேயே மட்டக் களப்புக்குச் சென்று சுவாமியைத்தேடிப் பிடித்துப் தக்கபரிகாரம் தேடிக்கொண்டு வருவாயாக' என்று கூறி அனுப்பிவைத்தார்.

அம்மையாருக்குச் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்ற தீராக்காதல். உடனே கப்பல் ஏறி மட்டுநகர்

## சேதம்மாவின் அடிமைத்திறன்

மட்டுநகர் சென்ற சேதம்மா, சுவாமிகள் இருந்த கார்த்திகேசுச் சுவாமிகளுடைய இல்லம் சென்றார். சுவாமிகளுடைய திருப்பாதங்களைச் சரண் அடைந்தார். தனக்கு இனிமேல் சுவாமிகள்தான் தாய், தந்தை, குரு தெய்வம், என்று பலர் அறியக்கூறி, சுவாமிகளுக்கே ஆளானார். அம்மையாருக்குக் காரைதீவில் ஒரு காணி இருந்தது. அதனைச் சுவாமிகள் பேரிலேயே அம்மையார் எழுதி வைத்தார். அக்காணியில் ஒரு வீடும் ஒரு புளிய மரமும் இருந்தன. அவ்வீட்டிலேயே சேதம்மா சுவாமிகளுடன் வாழ்ந்து திருத்தொண்டு செய்துவந்தார். உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூடமுடியுமா? குடிகார ஓவசியரேதான் முதலில் அவதூறு பேசினார். படாத பாடெல்லாம் பட்டுக் கடைசியில் குடிக்கு அடிமையாகி கவனிப் பாரற்று இறந்தார். மகான்களைப் பற்றிக் கூறும் அவதூறுகளை எல்லாம் அவர் ஒரே வார்த்தையில் அவை தமக்குச் சொந்தமில்லையென்று வந்தவரை நோக்கியே திருப்பி விட்டுவிடுவார்கள். யாரிடம் இருந்து அவதூறுகள் புறப்பட்டனவோ அவை அங்குச் சென்று அவரை அவதூறுக்கு ஆளாக்கிவிடும். இதனைத்தான் "தன் வினை தன்னைச்சுடும்" என்று சொல்வார்கள்.

கல்முனையில் வியாபாரம் செய்துவந்த வீரப்பச் செட்டியார் கண் நோயினால் மாதக்கணக்கான வருந்தினார். சுவாமிகளைத் தரிசிக்கச் சென்ற இடத்தில் சுவாமிகளுடைய உமிழ்நீர்பட்டு செட்டியாருடைய கண் நோய் குணமாகியது.

ஒருநாள் சுவாமிகளும் அடியார்களும் சேர்ந்து சோறும் கோழிக்கறியும் ஆக்கினார்கள். ஆக்கி முடிந்ததும் "இப்போ ஒருவரும் உண்ணக்கூடாது. இன்று இதை உண்பதற்கு விருந்தாளிகள் வருவார்கள்" என்றார்.

மணியப் பெருமானின் சொந்தச் சொத்து, அதை அணியும் சுவாமிமார் தங்களை அதற்குத் தகுதியாளர்களாக்கிக் கொள்ளவேண்டும்.'' இப்படி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டார்கள் சுவாமிகள்.

கந்தப்பன் என்ற வைத்தியர் நந்தனார் வம்சத்தைச் சேர்ந்தவர். அவரது இருப்பிடம் கோளாவில் கிராமம். சுவாமிகளிடம் பேரன்பு பூண்டவர். சுவாமிகள் அடிக்கடி கோளாவில் சென்று கந்தப்பனுடைய வீட்டிலேயே தங்குவார். சுவாமிகளைத் தரிசிக்க வரும் மேல் வருணத்தார் எல்லோருக்கும் அங்கு பால், பழம், உணவு எல்லாம் கிடைக்கும். இன்றும் சாதிப் பாகுபாட்டைப் பல இடங்களில் ஒழிக்க முடியவில்லை. சுவாமிகளுடைய சந்நிதிப் பெருமையாலே சமபந்தி போசனம் சமாசனம் எல்லாம் யாதொரு தடையுமின்றி நடைபெற்றன.

பழனியை இருப்பிடமாகக் கொண்ட ஞானானந்த சுவாமிகள் ஒரு முருகபக்தர். கதிர்காம தரிசனை முடிந்து சித்தானைக்குட்டிச் சுவாமிகளையுந் தரிசிக்க வருந்திருந்தார். அத்தருணத்தில் பல அன்பர்கள் கூடியிருந்தனர். ஞானானந்த சுவாமிகள் சித்தானைக்குட்டி சுவாமிகளை நிறைந்தோய விழ்ந்து வணங்கி ஒரு பக்கத்திலே ஒதுங்கி இருந்தார்கள். அன்பர் ஒருவர் வைத்திருந்த கந்தசஷ்டி கவசத்தை வாங்கி ஒரு பகுதியை எடுத்துக் கொடுத்து அதனை வாசிக்குமாறு சட்டளையிட்டார். அப்பகுதி பின்வருமாறு :-

'' அட்ட லட்சுமிகளில் வீரலட்சுமிக்கு
விருந்துண வாகச் சூரபத்மாவை
துணித்த கையதனால் இருபத்தேழ்வர்க்கு
உவந்து அமுதளித்த குருபரன்
பழனிக் குன்றினிலிருக்கும் சின்னக்
குழந்தை சேவடி போற்றி''

ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சுவாமிகள் தமது கையோடு கொண்டுவந்த விபூதியை நெற்றியில் இட்டார்கள். ''என்ன அம்மா இன்னுந் தூக்கமா?'' என்றார்கள். என்ன ஆச்சரியம்! அம்மையார் துடிதுடித்து எழுந்தார்கள. சுற்றுமுற்றும் பார்த்தார்கள் ஊரே திரண்டிருந்ததைக கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள். கூடியிருந்தவர்களுக்குத் பேராச்சரியம்! மாண்டவர் மீண்டால் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்?

## தீப்பிடித்த கதிர்காமத்திரையைக் கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைத்த புதுமை

ஒருநாள் சித்தானைக்குட்டி சுவாமிகள் கல்முனைச் சந்தியில் தெரு ஓரத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். சில அடியார்கள் சுவாமியைச் சூழ நின்றார்கள். சுவாமி முன்னிலையில் ஒரு அமைதி காணப்பட்டது. திடீரென உடுத்தியிருந்த வேட்டியை உரித்து கசக்கிக்கொண்டிருந்தார். கூட நின்றவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். ''என்னடா பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? கதிர்காமத் திரை தீப்பிடித்து எரிகிறது. கசக்கி அணையுங்களடா!'' என்றார். 'இதை அணைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ?' என்று கூறினார். கூட நின்றவர்களுக்கு இதன் அர்த்தம் புரியவே இல்லை. அடுத்தநாள் கதிர்காமக் கோயில் திருவிழாவில் பங்குகொண்ட ஒரு அன்பர் வந்து நேற்றைக்கு இத்தனை மணிக்கு கதிர்காமத் திரையில் தீட்பிடித்து எரிந்தது. உள்ளே நின்றவர்கள் நிலை குலைந்து அங்குமிங்கும் ஓடினார்கள்! ஒருவராவது அணைக்க முன்வரவில்லை. எங்கிருந்தோ சித்தானைக் சுவாமிகள் ஓடிவந்து அதனைக் கசக்கி அணைத்தார்கள். நெருப்போடு மிகப் போராடினார்கள் சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்திருக்காவிட்டால் என்ன நிகழ்ந்திருக்குமோ என்று கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடிய

வில்லை என்று அந்த அன்பர் கூறினார். முதல்நாள் கல்முனைச் சந்தியில் சுவாமியைச் சந்தித்தவர்கள் சுவாமி யின் மகிமையை ஓரளவு உணரத் தலைப்பட்டார்கள்.

## மீன்கறி கத்தரிக்காய் கறியாக மாறிய விந்தை

வைத்தியர் குஞ்சன் கதிர்காம யாத்திரையை மேற் கொண்டார். வழியில் அக்கரைப்பற்றுக்கு அருகே சித்தா னைக்குட்டி சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகளைக் கண்டதும் கதிர்காம முருகனைத் தரிசித்தது போன்று பரவசங்கொண்டார். நேரம் இரவு ஏழுமணி இருக்கும். சுவாமி ஒரு கடைக்குள் குஞ்சனைச் சாப்பிடுவதற்காக அழைத்தார். கடைக்காரர் மீன்கறி மாத்திரம்தான் இருக் கிறது, வேறு கறி இல்லை என்றார். இருவருக்கும் சோறு பரிமாறப்பட்டது. குஞ்சன். சுவாமியிடம் இரகசியமாக "நான் மீன் சாப்பிடுவதில்லை" என்றார். அது, கத்தரிக் காய்க் கறி, நீ பயமில்லாமற் சாப்பிடு" என்றார் சுவாமி கள். ஒரு சட்டியிலிருந்து பரிமாறப்பட்ட கறி, குஞ்ச னுக்குக் கத்திரிக்காயாகவும், சுவாமிகளுக்கு மீனாகவும் இருந்தது. சுவாமிகள் கள்ளுச் சாராயம் குடிக்கிறார்; இறைச்சி மீன் சாப்பிடுகிறார். நாங்களும் அப்படிச் செய் தால் என்ன என்று சிலர் கேட்பதுண்டு.

சுவாமியால் மீனைக் கத்திரிக்காயாக்கவும், கத்திரிக் காயை இறைச்சியாக்கவும், சாராயத்தைச் சர்பத்தாக் கவும், இறந்தவர்களை எழுப்பவும் முடியும். ஆகவே சுவாமிகள் செய்வதையெல்லாம் நாமும் செய்யவேண்டு மென்று விரும்புவது பிழை. இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அங்கிருந்த குத்துவிளக்கு எண்ணெய் இல்லாது ஒளி மங்கியது. உடனே சுவாமிகள் தமக்குக் குடிக்க வைத்திருந்த தண்ணீரை எடுத்துக்

குத்துவிளக்கில் ஊற்றினார்கள். விளக்குச் சுடர்விட்டு எர்ந்தது. குசன் ஆச்சரியத்துடன் பார்த்தார். வள்ளலார் தண்ணீரில் விளக்கெரித்த கதையை நினைவுபடுத்தினார்.

ஒருநாள் சுவாமிகள் சிலபக்தர்களுடன் ஆச்சிரமத்தில் இருந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு அன்பர் ஒரு போத்தல் சாராயம் கொண்டு வந்தார். சிலருடைய உள்ளத்திலே ஒருவித அசுசி ஏற்பட்டது. சுவாமிகள் ஒரு திருவிளை யாடல் நடத்த எண்ணினார். ஒரு சிரட்டை எடுத்து அதிலே ஊற்றி ஒருவருக்குக் கொடுத்தார். அவர் ஒன்றும் பேசாது வாங்கிக் குடித்தார். மற்றவருக்குக் கொடுத்த போது தாம் சாராயம் குடிப்பதில்லையென்று வாங்க மறுத்துவிட்டார். முதலில் குடித்தவர் அது சாராயம் இல்லை என்றும் அது சர்பத் என்றும் கூறினார். குடிக்க மறுத்தவர் இப்போ குடிக்க விருப்பம் காட்டினார். தனக்குத் தந்தது போதாது என்றும் சிரட்டை நிறைய ஊற்றித் தருமாறும் கேட்டார். இவ்வளவுதான் தர முடியும் என்று சுவாமிகள் கூற அவர் அதனை வாங்கிக் குடித்த உடனேயே வெறிகொண்டு ஆடத் தொடங்கி விட்டார். மீதியைத் தொண்டர் கந்தப்பனுக்குக் கொடுத் தார். அவர் எதுவுமே குடிப்பதில்லை என்று சொல்லி மறுத்துவிட்டார். சுவாமிகள் அந்தப் பங்கைத் தமது கையிலெடுத்து "நவநாதர் சாட்சியாகத் தொண்டர் கந்தப்பனே இதைக் குடிக்குறான்" என்று சுவாமிகள் குடித்தார்கள். சுவாமிகள் குடித்த உடனேயே தொண்டர் வெறியாட்டம் ஆனார்.

## சுவாமிகளின் உபதேசம்

"சாதுக்கள், சந்நியாசிகள் ஏன் இறைவனே வீட்டிற்கு வந்து விட்டால், அவர்களை உள்ளன்போடு உபசரித்து ஒருநேர உணவு அளி, அன்று தங்கிநிற்க

# 2007ஆம் ஆண்டு பன்னிரு திருமுறை முற்றோதிய அடியார்கள்

1. திரு. சிவ. முத்துலிங்கம்
2. திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்
3. திருமதி கமலாதேவி மகாலிங்கம்
4. திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்
5. திருமதி இராசமலர் சின்னராசா
6. திரு. மகாலிங்கம் சிவபாலன்
7. திருமதி தர்மதேவி சிறிசுப்பிரமணியம்
8. திருமதி நாகேஸ்வரி கணேஸ்
9. திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு
10. திரு.கயிரித்தம்பி நவரத்தினம்
11. திரு. காசிப்பிள்ளை கோபாலபிள்ளை
12. திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
13. திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு
14. திருமதி தேவமலர் நாகராசா
15. திரு. மருதையினார் சிவசாமி
16. திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம்
17. திரு. சி. பாலசுப்பிரமணியம்
18. திரு. சுப்பையா சிவபரமானந்தம்
19. திரு. ச. தியாகராசா
20. திருமதி விஜயலட்சுமி விக்கினேஸ்வரன்
21. திருமதி தங்கமுத்து தம்பித்துரை
22. திருமதி இராசமலர் முத்தையா
23. திரு. சி. செந்தூரன்
24. திருமதி கனகாம்பிகை வில்வராஜா
25. திருமதி பார்வதி நடராசா
26. திருமதி காந்திமலர் பரஞ்சோதி
27. திருமதி செல்வராணி நடராசா
28. திருமதி அன்பூரணம் கார்த்திகேசு
29. திருமதி கமலாதேவி அமிர்தராஜா
30. திருமதி அன்னபூரணம் அரசரத்தினம்

31. திரு. முருகவே பரமநாதன்
32. திரு. அருளானந்தம் குமரகுருபரன்
33. திரு. கணபதிப்பிள்ளை வித்தியானந்தன்
34. திருமதி கோகிலாம்பாள் கனகசபாபதி
35. திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம்
36. திரு. சி. முத்துத்தம்பி
37. திரு. செ. சோமசுந்தரம்
38. திரு. பெரியதம்பி விக்கினேஸ்வரன்
39. திரு. ஞா. புவனேந்திரன்
40. திரு. சி. தம்பிராசா
41. திருமதி சந்திரவதனா குலரஞ்சிதசிங்கம்
42. திருமதி க. இரத்தினேஸ்வரி
43. திரு இராசையா சிவஞானசுந்தரம்
44. திருமதி தவமணி தியாகராசா
45. திருமதி கமலாம்பிகை தியாகரத்தினம்
46. திரு. த. செ. நடராசா
47. திருமதி மகேஸ்வரி வியாகரத்தினம்
48. திருமதி குலமணி கந்தசாமி
49. திரு. இரத்தினம் லோகேஸ்வரன்
50. திருமதி திலகவதி ஞானசபாபதி
51. திரு. பா. ஞானசபாபதி
52. திருமதி மீனாம்பிகை இரத்தினம்
53. திருமதி வி. ஸ்கந்தாரணியம்
54. திரு. சி. காண்டீபன்
55. திருமதி கமலாசனி கோபாலபிள்ளை
56. செல்வி பரமேஸ்வரி சரவணைமுத்து
57. திரு. சு. திருச்செல்வம்
58 திருமதி .பரமேஸ்வரி பரமநாதன்
59. திரு. கா. கதிரவேல்
60. திரு. இ. சிவஞானசுந்தரம்
61. திரு. செ. பொன்னம்பலம்

62. திருமதி சின்னத்துரை செல்லமுத்து
63. திருமதி பரமேஸ்வரி யோகரத்தினம்
64. திருமதி மனோன்மணி தனபாலசிங்கம்
65. திரு. லெ. பக்கீர்சாமி
66. திருமதி பக்கீர்சாமி இராஜமணி
67. திருமதி பொற்கொடி கந்தசாமி
68. திருமதி நாகலோசனி நாகலிங்கம்
69. திரு. த. வடிவேலு
70. திரு. சீனியப்பா இராசரத்தினம்
71. திரு. த. தங்கராசா
72. திருமதி கணேஸ் கமலாதேவி
73. திருமதி அன்னபூரணம் கார்த்திகேசு
74. திரு. க. இரா. சேனாதிராஜா
75. திருமதி சற்குணதேவி பஞ்சலிங்கம்
76. திருமதி. கா. அன்னபூரணம்
77. திருமதி கமலம் மகாலிங்கம்
78. திரு. முருகர் தம்பையா
79. செல்வன் பிரசாந் சிவானந்தன்
80. செல்வி கௌதமி சிவானந்தன்
81. திருமதி. மீனலோசினி சிவானந்தன்
82. திருமதி பூ. சின்னையா
83. திருமதி. செல்வரஞ்சிதம் திருச்செல்வம்
84. திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம்
85. திரு. வி. கந்தவனம்
86. செல்வி கரிசா சாந்தராசா
87. செல்வன் கரிசன் சாந்தராசா
88. திரு. கு. வி. கந்தசாமி
89. திருமதி பொ. சரஸ்வதி
90. திருமதி சாந்தி சுயம்
91. திரு. க. சண்முகநாதன்
92. திருமதி. சாந்தராசா சறோஜினி
93. திருமதி த. பவானி
94. திரு. கனகசபை கந்தையா

## இந்நூல் வெளியிடுவதற்கு நிதி உதவிய திருக்கூட்டத்தினரின் விபரம்

| | |
|---|---|
| திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு | 100.00 |
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | 50.00 |
| திருமதி மகேஸ்வரி வியாகரத்தினம் | 50.00 |
| திரு. அருளானந்தம் குமரகுருபரன் | 50.00 |
| திருமதி குலமணி கந்தசாமி | 50.00 |
| திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம் | 50.00 |
| திருமதி சின்னத்துரை செல்லமுத்து | 50.00 |
| திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் | 50.00 |
| திருமதி கமலாதேவி மகாலிங்கம் | 50.00 |
| திருமதி இராசமலர் சின்னராசா | 50.00 |
| திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் | 50.00 |
| திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம் | 50.00 |
| திருமதி தேவமலர் நாகராசா | 50.00 |
| திருமதி சற்குணதேவி பஞ்சலிங்கம் | 50.00 |
| திருமதி சாந்தி சுயம் | 100.00 |
| திரு. த. கு. சபாரத்தினம் | 50.00 |
| திருமதி பரமேஸ்வரி பரமநாதன் | 50.00 |
| திரு. கனகசபை கந்தையா | 50.00 |
| திருமதி கோகிலாம்பாள் கனகசபாபதி | 50.00 |
| திரு. கு. வி. வரதகுமார் | 100.00 |
| திரு. மகாலிங்கம் சிவபாலன் | 50.00 |
| திருமதி நாகேஸ்வரி கணேஸ் | 50.00 |
| திருமதி கமலாம்பிகை தியாகரட்ணம் | 50.00 |

